NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p1
**Date:** 24 March 2024

# உலகமய சூழலில் வெளியுறவுக் கொள்கை முக்கியம்: ஜெய்சங்கர்

**ரவி சிங்காரம்**

கடினமான வெளியுறவுச் சூழலில் சிங்கப்பூர் சிறப்பாக உறவுகளைக் கையாள்வதாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் பாராட்டியுள்ளார்.

சிங்கப்பூர் வந்துள்ள டாக்டர் ஜெய்சங்கர், பான் பசிபிக்

ஹோட்டலில் சனிக்கிழமை (மார்ச் 23) பிற்பகல் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, சுமார் 300 பேரின் முன்னிலையில் உரையாற்றினார்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் தெற்காசியக் கல்விக் கழகம் அந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

அண்மையில் வெளியிடப்பட்ட ‘பாரத் ஏன் முக்கியம்?’ என்ற தம் நூலில் குறிப்பிட்டுள்ள கருத்துகளை டாக்டர் ஜெய்சங்கர் தமது உரையில் எடுத்துரைத்தார். அதைத் தொடர்ந்து, தெற்காசியக் கல்விக் கழகத்தின் இயக்குநர் இணைப் பேராசிரியர் இக்பால் சிங் கேள்வி-பதில் அங்கத்தை வழிநடத்தினார்.

இன்றைய உலகமயமான நிலையின் முக்கியச் சவால்களைக் கொவிட்-19 தொற்று உணர்த்தியதாக டாக்டர் ஜெய்சங்கர் எடுத்துரைத்தார்.

“அப்போது நாம் உலகின் ஒரு பகுதியையே நம் தேவைகளுக்காக நாடினோம். முகக்கவசம், அடிப்படை மாத்திரைகள்கூட கிடைக்குமா என்ற அச்சத்தில் இருந்தோம்,” என்றார் அவர்.



‘பாரதம் ஏன் முக்கியம்?’ நூலை வாங்கியோருக்கு அதில் அமைச்சர் ஜெய்சங்கர் கையெழுத்திட்டார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

இந்நிலையை மாற்ற இந்தியா தன் உற்பத்தித் துறையை வலுப்படுத்துவதாகவும், பல்கலைக்கழகங்களுக்குக் கூடுதல் தொழில்நுட்பங்களை வழங்குவதாகவும் அமைச்சர் கூறினார்.

நல்ல வெளியுறவுக் கொள்கையால், உக்ரேன் போரால் ஏற்பட்ட எரிபொருள் விலையேற்றப் பாதிப்பிலிருந்து இந்தியர்களைத் தற்காத்ததாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது வெளிநாட்டில் வசிக்கும் 30 மில்லியனுக்கும் மேற்பட்ட இந்தியர்கள் (மாணவர்கள் உட்பட), இந்தியப் பொருளியல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாக ‘பிரெய்ன் டிரெய்ன்’ என்ற திறனாளர் இழப்பு குறித்த கண்ணோட்டம் பழைமையானது என்றும் டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

rsingaram@sph.com.sg

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.